TNMD150003332022

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்</u>

<u>முன்னிலை திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி,</u>

<u>2026ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 10ம் நாள் திங்கள்கிழமை</u>

<u>அசல் வழக்கு எண். 253/2022</u>

1. மு. திருமணி.
2. திருமதி. ஜெ. சுலோச்சனா.
3. திருமதி. ஜெ. ஆர்த்தி.
4. ஜெ. வடிவேல் ராவணன்

.... வாதிகள்

/எதிர்/

1. திருமதி. ஜெகதீஸ்வரி.
2. ரா. வருண்.

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 10.07.2026 தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், 1ம் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இரா.விஜயசத்ரபதி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

இந்த வழக்கானது வாதிகள் தரப்பில் வழக்கிடைச் சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பாத்திய உரிமை உள்ளது என 2ம் பிரதிவாதி தனியாக பாகப்பிரிவினை கோர வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெறும் வரை வழக்கிடைச்

சொத்தின் வாதிகளின் அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, அவரது முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:–**

2.1. 1ம் வாதியும், 2ம் வாதியின் கணவரும், 3 மற்றும் 4ம் வாதிகளின் தகப்பனார் ஜோதிமணியும், 1ம் பிரதிவாதியும் சகோதர, சகோதரி ஆவார்கள். 1ம் வாதியும், 2ம் வாதியின் கணவர் ஜோதிமணியும், 1ம் பிரதிவாதியும் அவர்களுடைய பெற்றோர்களான பி. முருகேசன் மற்றும் திருமதி. ராஜாத்தி அம்மாளின் சட்டப்படியான வாரிசுகளாவார்கள், அவர்களை தவிர வேறு வாரிசுகள் கிடையாது. வழக்கிடைச் சொத்தும், பிற சொத்துக்களும் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். 1ம் வாதியின் தகப்பனார் முருகேசன், 1ம் வாதி, 2ம் வாதியின் கணவர் ஜோதிமணி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய நால்வரும் வழக்கிடைச் சொத்து உட்பட பிற குடும்ப சொத்துக்களை பொறுத்து 3.3.1995–ம் தேதியிட்டு பதிவில்லா பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையின்படி வழக்கிடைச் சொத்து 1ம் வாதிக்கும், 2ம் வாதியின் கணவர் மற்றும் 3, 4 வாதிகளின் தகப்பனார் ஜோதிமணிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. 3.3.1995ம் தேதியிட்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி 1ம் பிரதிவாதிக்கு மதுரை டவுன், மேலமடை கிராமம், நத்தம் சர்வே எண்: 53/2ல் உள்ள கதவிலக்கம் 1/23ல் உள்ள காரை வீடும், அதே போல் மேலமடை கிராமம் சர்வே எண்:46/ஏ2ல் உள்ள (கதவு எண்: 2/107) 5 கடைகளில் மேற்குபுறம் உள்ள கடையும் பாகமாக ஒதுக்கப்பட்டது.

2.2. 1ம் வாதியும், ஜோதிமணியும், 1ம் பிரதிவாதியும் மற்றும் அவர்களுடைய தகப்பனார் முருகேசன் ஆகிய நால்வரும் செய்து கொண்ட பாகப்பிரிவினை நடைமுறைக்கு வந்து 1ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினைப்படி கிடைத்த சர்வே

எண்: 53/2-ல் உள்ள கதவிலக்கம் 1/23-ல் உள்ள காரை வீட்டினை முதலில் வாடகைக்கு விட்டும், பின்னர் கோமதிபுரத்தை சேர்ந்த ஓய். அப்துல் ரஉறமானுக்கு ரூ.60,000/-க்கு ஒத்திக்கு விட்டுள்ளார். அதே போல் 1ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சர்வே எண் 42/2ஏல் உள்ள 5 கடைகளில் மேற்குபுறம் உள்ள கடையை செல்வகுமார் என்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளார். 1ம் வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களையும், ஜோதிமணிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களையும், அவர்களுடைய தகப்பனார் முருகேசனுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள். 2ம் வாதியின் கணவர் ஜோதிமணி இறந்த பின்பு அவருடைய வாரிசுகளான 2 முதல் 4 வாதிகள் அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள். 2ம் வாதியின் கணவர் ஜோதிமணி 11.7.2000ம் தேதியில் இறந்த பின்பு தாயார் இராஜாத்தி அம்மாள் 10.3.2001ல் இறந்து விட்டார். இராஜாத்தி அம்மாள் இறந்த பின்பு 1ம் வாதியின் தகப்பனார் 16.5.2010ம் தேதி இறந்த பின்பு மேற்படி பாகப்பிரிவினையின் படி அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட் செடியூல் சொத்துக்களை பாகப் பத்திரத்தில் குறிப்பிட்டப்படி 1ம் வாதியும், 2 முதல் 4 வாதிகளும் சமமாக அடைந்து அனுபவித்து வருகிறார்கள்.

2.3. 1ம் பிரதிவாதியானவர் மேற்படி உண்மை நிலைகளை மறைத்து 1ம் வாதி மற்றும் 2 முதல் 4 வாதிகளின் பாகபாத்திய சொத்துக்களான வழக்கிடைச் சொத்து உட்பட பிற சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தவறான தகவல்களைக் கூறி மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வாதிகளின் பேரில் பாகப்பிரிவினை கோரி மு.வ. 80/2011என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது, வழக்கிடைச் சொத்தை பொறுத்து எவ்வித சம்பந்தமும் சிறிதும் இல்லாத 1ம் பிரதிவாதியானவர் வருவாய் துறையினருக்கு தவறான தகவல்களை தெரிவித்து

வழக்கிடைச் சொத்தை பொறுத்து கூட்டுப்பட்டா பெற்றிருந்தார். 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டுப்பட்டா தவறாக வழங்கப்பட்டதை இரத்து செய்யக் கோரி வாதி மதுரை வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் பட்டா மேல்முறையீடு ந.க.எண்:7349/2014/N தாக்கல் செய்து, விசாரணைக்கு பின் மு.வ. 80/2011 வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டுப்பட்டா மாற்றம் செய்யப்பட்டது தவறாகும். அதனால் 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டுப்பட்டா RTR 6155/13 நாள் 24.6.2013ன்படி வழங்கப்பட்டுள்ளதை ரத்து செய்து, பட்டா மாறுதலுக்கு முந்தைய நிலைக்கு கொண்டு செல்ல மதுரை கிழக்கு வட்டாட்சியருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ. 80/2011 வழக்கில் பிறப்பிக்கப்படவிருக்கும் தீர்ப்பினை அடிப்படையாக கொண்டு தாவாச் சொத்தின் உரிமையை முடிவு செய்யலாம் என உத்திரவில் பகரப்பட்டுள்ளது. மு.வ. 80/2011 வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது 1ம் பிரதிவாதி எம். கருணாமூர்த்தி என்பவருடன் கூட்டாக மோசடியாக கிரைய ஒப்பந்த பத்திரம் எண்: 3074/2014 ஏற்படுத்திக் கொண்டுள்ளது வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் 1ம் பிரதிவாதி செயல்பட்டுள்ளார் என ஊர்ஜிதமாகிறது என மதுரை வருவாய் கோட்டாட்சியர் தன் உத்தரவில் பகர்ந்துள்ளார். மதுரை வருவாய் கோட்டாட்சியர் ந.க.எண்7349/2014/N தேதி 1.11.2015ல் பிறப்பித்துள்ள உத்தரவின் படி வழக்கிடைச் சொத்தை பொறுத்து வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு இன்று வரை அவர் பெயரில் இருந்து வருகிறது.

2.4. வழக்கிடைச் சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும் சிறிதும் இல்லாத 1ம் பிரதிவாதியானவர் மு.வ. எண்.80/2011 வழக்கில் அவருக்கு ஆதரவாக எந்த உத்திரவும் பிறப்பிக்கப்படாத நிலையிலும், வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளதை மறைத்தும் பதிவு பெற்ற கிரைய ஒப்பந்தம் ஆவண எண்: 3074/2014–

ஐ உற்பத்தி செய்திருந்தார். 1ம் பிரதிவாதியும், எம். கருணாமூர்த்தியும் மோசடியாக வழக்கிடைச் சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க கோரி வாதி மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளிடம் 23.10.2014–ம் தேதியிட்டு மனுக்கொடுத்ததின் பேரில் கருப்பாயூரணி காவல்நிலையத்தார் விசாரணை செய்தார்கள். விசாரணையின் பொழுது ஆஜரான எம். கருணா மூர்த்தி வழக்கு நிலுவையில் இருப்பது தனக்கு தெரியாது. வழக்கு முடியும் வரை வழக்கிடைச் சொத்திற்கு வரமாட்டேன் என எழுதிக் கொடுத்துள்ளார்.

2.5. மு.வ. 80/2011 வழக்கில் 1ம் பிரதிவாதி பிற குடும்ப உறுப்பினர்களோடு கடந்த 3.3.1995–ம் தேதியிட்டு செய்து கொண்ட பதிவில்லா பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லையென மறுத்ததின் பேரில் கையெழுத்து நிபுணர் கருத்தாய்வுக்கு வ.வி.எண்: 1417/2019ல் பிறப்பித்த உத்திரவின்படி கையெழுத்து நிபுணர் கருத்தாய்விற்கு அனுப்பப்பட்டு, ஆய்வுக்கு பின் தாக்கல் செய்யப்பட்ட கையெழுத்து நிபுணர் கருத்தாய்வு அறிக்கையில் 3.3.1995–ம் தேதியிட்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினையில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுனுடைய கையெழுத்து என தன் அறிக்கையில் உறுதிபட தெரிவித்துள்ளார். அவ்வாறு கையெழுத்து நிபுணர் அறிக்கை சமர்பித்த பின்பு வழக்கிடைச் சொத்திற்கான மூல ஆவணங்கள் வாதி வசம் இருப்பது தெரிந்தும் அதை மறைத்து மோசடியாக ஆவண எண்: 244/1950ஐ பிரதிவாதி தன்னுடைய வீட்டின் மராமத்து பணியின் போது தொலைந்து விட்டது போல் மூல ஆவணங்கள் தொலைந்து விட்டதாக 22.4.2021ம் தேதி மக்கள் குரல் தினசரி நாளிதழில் பொது விளம்பரம் மூலம் அறிவிப்பு செய்து அதன் பின் 23.4.2021ம் தேதி மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் மூல ஆவணம் தொலைந்து விட்டதாக ஆன்லைன் மூலம் புகார் கொடுத்து கண்டுபிடித்து

தருமாறு விண்ணப்பித்துள்ளார். அதன்பின் 2ம் பிரதிவாதியோடு சேர்ந்து 1ம் பிரதிவாதியானவர் 2ம் பிரதிவாதிக்கு வழக்கிடைச் சொத்தில் தனக்கு 1/3 பாக பாத்திய உரிமை உள்ளதாக தவறான மோசடியான தகவலை தெரிவித்து பிரிவினையில்லாத 1/3 பாக பாத்திய உரிமையை 2ம் பிரதிவாதிக்கு 30.4.2021ம் தேதியிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளது போல் போலியான மோசடியான கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார். அதன் பின் 1,2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட கிரைய பத்திரத்தினை பொறுத்து எழுத்து பிழை உள்ளதாகக் கூறி சீர்திருத்த பத்திரம் 15.6.2021–ம் தேதி ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

2.6. அசல் தாய்பத்திரம் 1ம் வாதி வசம் பாகப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது படி உள்ளது. அதை மறைத்து மோசடியாக வேறு தாய்பத்திரத்தை மோசடியான தோற்றத்தை ஏற்படுத்தி 1ம் பிரதிவாதி கிரையம் செய்துள்ளார். அவ்வாறு நீதிமன்றத்தின் முன்னிலையில் கையெழுத்து நிபுணர் தன் அறிக்கையை சமர்பித்தவுடன் 1ம் பிரதிவாதி பிற குடும்ப உறுப்பினர்களுடன் கடந்த 3.3.1995–ம் தேதியிட்டு ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை உண்மையென தெரிய வந்து விடும் என்பதால் 1ம் பிரதிவாதி மு.வ. 80/2011 வழக்கினை தான் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருந்த வழக்கை மேற்கொண்டு நடத்த விரும்பாமல் வாபஸ் பெற்றுக் கொள்வதற்காக குறிப்பாணை தாக்கல் செய்திருந்தார். அவ்வாறு வழக்கை வாபஸ் செய்வதற்கு வாதி ஆட்சேபணை தெரிவித்து பதில் சமர்பித்ததின் பேரில் வழக்கை செலவு தொகையுடன் வாபஸ் பெறுவதற்கு அனுமதியளித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. வழக்கு நிலுவையில் இருப்பதை மறைத்து மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எவ்வித பாகப்பிரிவினை உள்ளதாக நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படாத நிலையில் வழக்கிடைச் சொத்தில் தனக்கு பாகப்பாத்திய உரிமை உள்ளதாக கூறி 2ம் பிரதிவாதியின்

உதவியுடன் மோசடியான பொய்யான கிரைய பத்திரத்தை உற்பத்தி செய்துள்ளார்கள். மோசடியான கிரைய பத்திரத்தின் அடிப்படையில் மோசடியான சீர்திருத்த பத்திரத்தையும் உற்பத்தி செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த பாகப்பிரிவினை வழக்கு மு.வ.80/2011 வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை சட்டப்படி உள்ளது என உத்திரவு பிறப்பிக்கப்படாத நிலையில் வழக்கிடைச் சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கோ அல்லது மூன்றாவது நபருக்கோ கிரையம் செய்து கொடுப்பதற்கு சட்டப்படி எவ்வித அருகதையும் சிறிதும் கிடையாது. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து உற்பத்தி செய்துள்ள ஆவணத்தில் 7வது பக்கத்தில் வழக்கிடைச் சொத்தை பொறுத்து எவ்வித வழக்கும் நிலுவையில் இல்லை. அப்படி ஏதேனும் இருந்தால் அதனை தானே தீர்த்து கொடுப்பதாகவும் 1ம் பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார். மு.வ. 80/2011 வழக்கு நிலுவையில் உள்ளதை 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தால் சார்பதிவாளர் கிரைய பத்திரத்தை பதிந்து இருக்க மாட்டார். அதனால் அதை 1–ம் பிரதிவாதி வேண்டுமென்றே மறைத்துள்ளார்.

2.7. வழக்கிடைச் சொத்தைப் பொறுத்து எவ்வித உரிமையும் சிறிதும் இல்லாத 1ம் பிரதிவாதி தனக்கு பாகபாத்திய உரிமையுள்ளதாக தவறான தகவலைக் கூறி அதை 2ம் பிரதிவாதிக்கு கிரையம் மற்றும் சீர்திருத்தம் பத்திரங்களை உண்மையான ஆவணம் போல் போலியான ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளதின் பேரில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயரில் உற்பத்தி செய்துள்ள கிரைய ஆவணம் மற்றும் சீர்திருத்த ஆவணத்தை ரத்து செய்து அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரை வடக்கு பதிவு மாவட்ட பதிவாளரிடம் 1ம் வாதி மனுக் கொடுத்திருந்தார். மாவட்ட பதிவாளர் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் சட்டப்படி உரிமையியல் நீதிமன்றம் மூலமாகவோ அல்லது மேல்முறையீடு செய்து பரிகாரம் பெற்றுக் கொள்ள

அறிவுரை வழங்கி உத்திரவு பிறப்பித்துள்ளார். மேற்படி உத்திரவினை எதிர்த்து வாதி பதிவுத்துறை துணைத் தலைவர் மதுரை அவர்களிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. பிரதிவாதிகள் வழக்கிடைச் சொத்தின் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய எத்தனித்ததின் பேரில் கடந்த 19.8.2021-ம் தேதியிட்டு 1ம் வாதி மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் நேரிலும், 21.12.2021ம் தேதி வாதிகள் பதிவு தபால் மூலம் மனு அனுப்பியுள்ளார். அதன் பின் விசாரணைக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2.8. 1ம் பிரதிவாதிக்கு வழக்கிடைச் சொத்தில் பாகப்பாத்திய உரிமை உள்ளதாக உண்மைக்கு புறம்பாக கிரையம் பெற்றுள்ள 2ம் பிரதிவாதி, வழக்கிடைச் சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பாத்திய உரிமை உள்ளது என தனியாக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது சட்டநிலையாகும். மேற்படி சட்டநிலை சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 44-ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதியானவர் சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 44ன் படி தனியாக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர வேறு எந்த வகையிலும் வாதிகளின் வழக்கிடைச் சொத்தின் அனுபவத்திற்கு எவ்வித இடையூறும் செய்வதற்கு சட்டப்படி உரிமை கிடையாது. 1ம் வாதி வழக்கம் போல் வழக்கிடை சொத்தை 17.9.2022ம் தேதியிட்டு காலை 10.00 மணியளவில் பார்க்க சென்ற பொழுது 2ம் பிரதிவாதி அவருடைய ஆட்களுடன் வந்து வழக்கிடைச் சொத்தின் வாதிகள் அனுபவத்திற்கு இடையூறு செய்ய எத்தனித்தார்கள். வழக்கிடைச் சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பாத்திய உரிமை உள்ளது என்பதை 2-ம் பிரதிவாதி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெறும் வரை வழக்கிடைச் சொத்துக்களில் வாதிகளின் வழக்கிடைச் சொத்தின்

அனுபவத்திற்கு இடையூறு செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

3. 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 1ம் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**4. 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-**

4.1) வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர, மற்றவை இந்த பிரதிவாதியால் மறுக்கப்படுகின்றன, வாதிகளே அவற்றை தகுந்த சான்றாவணங்களுடன் நிரூபிக்கக் கடமைப்பட்டவராவர். வழக்குரையில் 4-வது பத்தியில் ராஜாத்தியம்மாள் மற்றும் மனுதாரரின் தந்தை முருகேசன் ஆகியோரின் இறப்பு தொடர்பான குறிப்புகள் மட்டும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஆனால், 5 முதல் 8 வரையிலான பத்திகளில் கூறப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை, மோசடியானவை மற்றும் கற்பனையானவை. 03.03.1995 தேதியிட்டதாகக் கூறப்படும் பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினைப் பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்து வாதிகளுக்குச் சொந்தமானது என்றும், அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு சில சொத்துக்கள் ஒதுக்கப்பட்டன என்றும், அவர் சில சொத்துக்களை செல்வகுமார் மற்றும் அப்துல் ரஹ்மான் ஆகியோருக்கு குத்தகை மற்றும் அடமானம் வைத்தார் என்றும், ஜோதிமணி இறந்தபின் அவரது பங்கை வாதிகள் 2 முதல் 4 வரை பெற்றனர் என்றும், பின்னர் முருகேசன் இறந்தபின் அவரது பங்கையும் வாதிகள் பெற்றனர் என்றும் கூறப்படுவது அனைத்தும் முற்றிலும் பொய்யானவை. 1ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ பங்கை அபகரிக்கும் தீய நோக்கத்துடன் இக்கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

4.2) மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் O.S.No.80/2011 வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது உண்மை. ஆனால், அந்த வழக்கை 1ம் பிரதிவாதி

மோசடியான நோக்கத்துடன் தாக்கல் செய்தார் என்பது முற்றிலும் தவறானது. உண்மையில், பிற சொத்துகளில் தனக்கிருந்த பங்குகளை பேரக்குழந்தைகளுக்கு மாற்றிய பின்னரும், தாவா சொத்தில் தனக்கிருந்த 1/3 பங்கினை 30.04.2021 அன்று 2ம் பிரதிவாதிக்கு செல்லுபடியாக விற்பனை செய்ததன் காரணமாகவே அந்த வழக்கை தொடராமல் விட்டார். தாவா சொத்து O.S.No.80/2011 வழக்கில் சேர்க்கப்படவில்லை. காரணம், முருகேசனின் சட்டப்பூர்வ வாரிசுகள் அனைவரும் அச்சொத்தை பொதுவாக அனுபவிக்க ஒப்புக்கொண்டிருந்தனர். கூட்டுப்பட்டா, வருவாய் கோட்டாட்சியரிடம் செய்யப்பட்ட மேல்முறையீடு, கருணாமூர்த்தியுடன் செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஒப்பந்தம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் திரித்துக் கூறப்பட்டு வாதிகளின் வசதிக்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளன.

4.3) வழக்குரையில் 9 முதல் 12வது பத்திகளில் கூறப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை. O.S.No.80/2011 வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்றும், அவர் வழக்கை மறைத்து ஒப்பந்தம் செய்தார் என்றும், காவல்துறை விசாரணை, கருப்பாயூரணி காவல் நிலைய நடவடிக்கைகள், கைரேகை நிபுணர் கருத்து, ஆவணம் காணாமல் போனது குறித்த புகார், 30.04.2021 விற்பனைப்பத்திரம் மற்றும் 15.06.2021 திருத்தப்பத்திரம் ஆகிய அனைத்தும் வாதிகளால் உண்மைக்கு மாறாக திரித்துக் கூறப்பட்டுள்ளன. 03.03.1995 தேதியிட்டதாகக் கூறப்படும் பாகப்பிரிவினைப் பத்திரம் முழுமையாக போலியாக உருவாக்கப்பட்ட ஆவணமாகும். முருகேசனின் கூட்டுக் குடும்பச் சொத்துகள் தொடர்பான பதிவுகளில் எந்தக் காலத்திலும் பாகப்பிரிவினை நடைபெற்றதற்கான ஆதாரம் இல்லை.

4.4) பதிவு செய்யப்படாத 03.03.1995ம் தேதியிட்டதாகக் கூறப்படும் பாகப்பிரிவினைப் பத்திரத்தின் அடிப்படையில் வாதிகள் தாவா சொத்தின் மீது

தனியுரிமை கோர இயலாது. பதிவு சட்டம், 1908—ன் பிரிவு 17(1)—ன்படி அவ்வாறான பத்திரம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டியதாகும். பதிவு செய்யப்படாத ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே, அதன்மூலம் வாதிகளுக்கு எந்த உரிமையும் உருவாகாது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் 1/3 பங்கு கொண்டிருந்ததால், அதனை 30.04.2021 அன்று உரிய விலைக்கு 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து, பின்னர் 15.06.2021 அன்று திருத்தப்பத்திரமும் பதிவு செய்துள்ளார்.

4.5) 1ம் வாதியிடமே மூலப்பத்திரம் இருந்தது என்றும், நீதிமன்றத் தீர்ப்பு இல்லாமல் 1ம் பிரதிவாதி விற்பனை செய்ய முடியாது என்றும், கைரேகை நிபுணர் கருத்து காரணமாக O.S.No.80/2011 வழக்கை வாபஸ் பெற்றார் என்றும் கூறப்படுவது அனைத்தும் பொய்யானவை. முருகேசனின் சட்டப்பூர்வ வாரிசான 1ம் பிரதிவாதி வாரிசுரிமையின் அடிப்படையில் தனக்குரிய பங்கைப் பெற்றுள்ளார். எனவே, அந்தப் பங்கை மாற்றுவதற்கு நீதிமன்றத் தீர்ப்பு அவசியமில்லை. அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த காரணத்தினாலும், குடும்பத்தினரின் ஆலோசனையின்படியும் முந்தைய வழக்கை தொடர்ந்து நடத்தவில்லை. மாவட்ட பதிவாளர் மற்றும் பதிவுத்துறை தலைமை அலுவலரிடம் வாதிகள் செய்த மனுக்கள் சொத்துரிமையை தீர்க்கக்கூடியவை அல்ல. சொத்துரிமை தொடர்பான தகராறு உரிமையியல் நீதிமன்றத்தால் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும்.

4.6) 03.03.1995 தேதியிட்டதாகக் கூறப்படும் பாகப்பிரிவினைப் பத்திரம் சட்டப்படி செல்லுபடியாகாததுடன், அது போலியாக உருவாக்கப்பட்ட ஆவணமாகும். அதிலுள்ள கையொப்பமும் போலியானதாகும். சொத்து மாற்றுச் சட்டம் பிரிவு 44 குறித்து வாதிகள் தவறாக விளக்கம் அளித்துள்ளனர். காவல்துறையில் அளிக்கப்பட்ட புகார்கள், 17.09.2022 அன்று இடையூறு

செய்ததாகக் கூறப்படும் சம்பவம் மற்றும் நடவடிக்கைக் காரணம் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளும் கற்பனையானவை. வாதிகள் முரண்பாடான வாதங்களை முன்வைத்து, விளம்புகை பரிகாரம் கோராமல் வெறும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். மேலும், கூறப்படும் பாகப்பிரிவினைப் பத்திரத்தில் சர்வே எண் 36/2B2 இடம்பெறாத நிலையிலும், அதன் மீது உரிமை கோருகின்றனர். வாதிகள் உண்மை விவரங்களை மறைத்து, போலியான ஆவணங்களை உருவாக்கி, தூய்மையற்ற கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். இவ்வழக்கு நீதிமன்ற நடைமுறையை துஷ்பிரயோகம் செய்து, 2ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ உரிமையைப் பறிக்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டதாகும். எனவே வாதிகளின் வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**5.<u>சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u>**

இவ்வழக்கில் வாதிகளின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் 1ம் வாதி திரு. திருமணி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி திரு. வருண் என்பவர் பி.வா.சா.2ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது வா.சா.ஆ.17 மற்றும் வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6. எழுவினாக்கள்</u>**

1) Whether the suit property entirely belongs to the plaintiff as stated in the plaint?

2) Whether the suit is not maintainable without securing relief of

declaration of title?

3) Whether the plaintiff is in possession over the suit property?

4) Whether the plaintiff is entitled for permanent injunction?

5) To what other reliefs?

இந்த வழக்கில் மேலே கண்டவாறு எழுவினாக்கள் 1 முதல் 5 வரை வனையப்பட்டுள்ளது. இருப்பினும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்த வழக்கை பொருத்தமட்டில் தற்பொழுது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், வாதி தரப்பில் வாதிடும் வாதமான தாவா சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து, அதன் அடிப்படையில் தான் உரிமை கொண்டாட முடியும் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதா? அல்லது கிரையம் பெற்ற முதல் தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதா? என்பதே ஆகும். எனவே எழுவினாக்கள் கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகிறது.

**<u>மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்கள்</u>**

1) Whether the plaintiff is in possession over the suit property?

2) Whether the plaintiff is entitled for permanent injunction?

3) To what other reliefs?

மேல்கண்டவாறு எழுவினாக்கள் மாற்றியமைக்கப்பட்டபோதிலும், தரப்பினர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்பட போவதில்லை. எனவே மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்களுக்கு கீழ்க்கண்டவாறு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

6.1) வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா சொத்து ஆதியில் முருகேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும். 1ம் வாதியும், 2ம் வாதியின் கணவரும், 3 மற்றும் 4ம் வாதிகளின் தகப்பனாரும் ஆன ஜோதிமணி என்பவரும் 1ம் பிரதிவாதியும் சகோதர சகோதரிகள் என்றும், தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து 1ம் வாதியின் தகப்பனார் முருகேசன், வாதி, ஜோதிமணி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்களுக்குள் 03.03.1995 தேதியிட்ட பதிவில்லா பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும், அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் 1ம் வாதிக்கும், ஜோதிமணி என்பவருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி பாகப்பிரிவின்படி 1ம் பிரதிவாதிக்கு மேலமடை கிராமம் நத்தம் சர்வே எண் 53/2ல் உள்ள கதவு இலக்கம் 1/23ல் உள்ள காரை வீடும், அதே போல் மேலமடை கிராமம், சர்வே எண் 46/2ஏ-ல் உள்ள கதவு எண் 2/107 உள்ள 5 கடைகளில் மேற்கு புறம் உள்ள கடையும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், பாகப்பிரிவினை அடிப்படையில் அவர்களுக்கு கிடைத்த கடையை அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றும், ஜோதிமணி இறந்த பின்பு அவரது வாரிசுகளான 2 முதல் 4 வாதிகள் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றும், இந்த நிலையில் 1ம் பிரதிவாதி உண்மை நிலைகளை மறைத்து 1ம் வாதி மற்றும் 2 முதல் 4 வாதிகளின் பாகத்திற்குரிய சொத்துக்களான வழக்கிடை சொத்து உட்பட இதர சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தவறான தகவல்களை கூறி, மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் O.S. No.80/2011 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும், 1ம் பிரதிவாதியானவர் O.S. No.80/2011 வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்கிடை சொத்தை பொருத்து எவ்வித சம்பந்தமும் சிறிதும் இல்லாத 1ம் பிரதிவாதியானவர் வருவாய்த்துறையிருக்கு தவறான தகவல்களை தெரிவித்து, தாவா சொத்தை

பொறுத்து கூட்டு பட்டா பெற்றிருந்தார் என்றும், 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டு பட்டா தவறாக வழங்கப்பட்டதன் பேரில் அதை ரத்து செய்ய கோரி வாதி மதுரை வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் மேல்முறையீடுஎண் ந.க.எண் 7349/2014/N தாக்கல் செய்திருந்தார் என்றும். விசாரணைக்கு பின்பு O.S. No.80/2011 வழக்கு நிலுவையில் இருக்கும் போது, 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டு பட்டா மாற்றம் செய்யப்பட்டது தவறாகும் என்றும், அதனால் 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டு பட்டா RTR 6155/2013 நாள் 24.06.2013ன்படி வழங்கப்பட்டுள்ளதை ரத்து செய்து, பட்டா மாறுதலுக்கு முந்தைய நிலைக்கு கொண்டு செல்ல மதுரை கிழக்கு வட்டாட்சியருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மு.வ.80/2011 வழக்கில் முடிவின் அடிப்படையில் தாவா சொத்தின் உரிமையை முடிவு செய்யலாம் என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மு.வ.80/2011 வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது 1ம் பிரதிவாதி, எம். கருணாமூர்த்தி என்பவர் உடன் கூட்டாக மோசடியாக கிரைய ஒப்பந்த பத்திரம் ஆவண எண் 3074/2014 ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்று மதுரை வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவில் பகிர்ந்து உள்ளார் என்றும், தாவா சொத்திற்கான பட்டா இன்றுவரை 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு அவரது பெயரிலேயே இருந்து வருகிறது என்றும், தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயரில் போலியாக உற்பத்தி செய்த கிரைய ஆவணம் மற்றும் சீர்திருத்த ஆவணத்தை ரத்து செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாதி மதுரை வடக்கு பதிவு மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்து, மேற்படி மனு மீது பிறப்பித்த உத்தரவில் உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும் என பிறப்பிக்கப்பட்டது என்றும், அதை எதிர்த்து வாதி மதுரை பதிவுத் துறை துணை தலைவர் அவர்களிடம் கொடுத்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றும், தாவா சொத்தில் பிரிவினை இல்லாத பாக உரிமையை கிரையம்

பெற்றுள்ள 2ம் பிரதிவாதி வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறார் என்றும், எனவே தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாக பாத்திய உரிமை உள்ளது என 2ம் பிரதிவாதி தனியாக பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெறும் வரை, வழக்கிடை சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது. வாதி தரப்பில் கீழ்க்கண்ட முன்தீர்ப்புரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. 2003 (3) LW 255
2. 2022 (3) MLJ 738
3. 2024 (5) MLJ 385 (SC)

6.2) 2ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, 2ம் பிரதிவாதி தகுந்த பிரதி பிரயோஜனத்தின் பெயரில் தாவா சொத்தை கிரையம் வாங்கி உள்ளார் என்றும், 1ம் பிரதிவாதியும், வாதியும், ஜோதிமணி என்பவரும் வாரிசுதாரர்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் தரப்பினர்களிடையே இல்லை என்றும், வாதிகள் கூறுவது போல் எந்த ஒரு பாகப்பிரிவினை ஆவணமும் நடைமுறையில் இல்லை என்றும், 2ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது ஆவணங்களை சரி பார்த்து அதன் அடிப்படையிலேயே கிரையம் வாங்கியுள்ளார் என்றும், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகத்தை பொறுத்து மட்டுமே தாவா சொத்தில் கிரையம் வாங்கி உள்ளார் என்றும், கிரையம் வாங்கியதில் இருந்து தாவா சொத்தில் வாதி மற்றும் ஜோதி மணியின் வாரிசுதாரர்களுடன் 2ம் பிரதிவாதி கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும், எனவே உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர சட்டப்படி இயலாது என்றும் வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். 2ம் பிரதிவாதி தரப்பில்

கீழ்க்கண்ட முன்தீர்ப்புரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. 2025(4) SCC 19
2. 2019 (1) MWN (Civil) 816
3. 2025 (4) CTC 119
4. 2025 (4) CTC 317
5. 2025 (3) LW 655
6. R. Muthulakshmi Vs Valliammal - Judgment dt. 16.07.2021
7. 1994 (2) CLJ 114
8. R. Manickam Vs. P. Ramasamy & 2 others -Judgment dt. 24.01.2020

6.3) வாதிகள் தரப்பில், 1ம் வாதி திரு. திருமணி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். 03.03.1995 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் அசல் வா.சா.ஆ.1ஆகவும், அசல் வழக்கு எண்.80/2011ல் உள்ள பிராது சார்வு நகல் வா.சா.ஆ.2ஆகவும், மதுரை வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்துள்ள உத்தரவு சார்வு நகல் வா.சா.ஆ.3ஆகவும், 25.02.2021 தேதியிட்ட கையெழுத்து நிபுணரின் அறிக்கை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4ஆகவும், 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5ஆகவும், 15.06.2021 தேதியிட்ட சீர்த்திருத்தப் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6ஆகவும், அசல் வழக்கு எண்.80/2011 வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள Not press memo வா.சா.ஆ.7ஆகவும், 25.03.2022 தேதியில் அசல் வழக்கு எண்.80/2011 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8ஆகவும், 25.03.2022 தேதியில் அசல் வழக்கு எண்.80/2011ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9ஆகவும், 08.11.2014 தேதியில் கருணாமூர்த்தி, 1ம் வாதிக்கு காவல்துறை விசாரணையின்போது எழுதிக்கொடுத்த வாக்குமூலம் வா.சா.ஆ.10ஆகவும், 1ம் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக 19.08.2021 தேதியில் மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு கையிருப்பு நகல் வா.சா.ஆ.11ஆகவும், வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த

21.12.2021 தேதியில் தபால் மூலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு கையிருப்பு நகல் அதன் அஞ்சலக ரசீது அசல் வா.சா.ஆ.12ஆகவும், மேற்படி தபாலை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.13ஆகவும், 07.01.2022 தேதியில் மதுரை மாவட்ட நில அபகரிப்புதடுப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து வாதிக்கு அளிக்கப்பட்ட காவல் அழைப்பாணை அசல் வா.சா.ஆ.14 ஆகவும், 20.06.2022 தேதியில் மாவட்ட பதிவாளர் அவர்கள் பிறப்பித்த உத்தரவு நகல் வா.சா.ஆ.15ஆகவும், துணை பதிவுத் தலைவர் அவர்களிடம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் கையிருப்பு நகல் வா.சா.ஆ.16 ஆகவும், 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட கேவியட் மனு சார்வு நகல் வா.சா.ஆ.17ஆகவும், அசல் வழக்கு எண்.80/2011 பிராதுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்ட A ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.18 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.4) பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி திரு. வருண் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் எதிர்வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். 09.07.2021 தேதியிட்ட தான செட்டில் மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், 02.12.2002 தேதியிட்ட பவர் பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும், 28.11.1980 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆகவும், 18.11.1993 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆகவும், 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5 ஆகவும், 15.06.2021 தேதியிட்ட சீர்திருத்த பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆகவும், 24.02.2023 தேதியிட்ட சீர்திருத்த பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்கள் 1 மற்றும் 2ற்கான தீர்வு :–

1) Whether the plaintiff is in possession over the suit property?

2) Whether the plaintiff is entitled for permanent injunction?

7.1) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில், தாவா சொத்து ஆதியில் முருகேசன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், 1ம் வாதியும், ஜோதிமணியும், 1ம் பிரதிவாதியும், முருகேசன் என்பவரது வாரிசுதாரர்கள் என்பதும் இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். மேலும் 1ம் பிரதிவாதி தரப்பில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் O.S. No.80/2011 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி வழக்கானது 1ம் பிரதிவாதியால் திரும்ப பெறப்பட்டுள்ளது என்பதும் இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

7.2) வாதி தரப்பில் வாதிடும்போது, தாவா சொத்து சம்பந்தமாக 1ம் வாதி மற்றும் ஜோதிமணி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்களுக்கிடையே பாக பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் அவரவர்களுக்கு கிடைக்கப்பெற்ற சொத்தைப் பொறுத்து, அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், இந்த நிலையில் வாதி மற்றும் ஜோதிமணி ஆகியோர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட தாவா சொத்தை பொருத்து 1ம் பிரதிவாதி தனக்கு பாகம் இருப்பது போல் காண்பித்து O.S. No.80/2011 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்தது என்றும், பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள கையெழுத்தை 1ம் பிரதிவாதி மறுக்கவே, கையெழுத்து நிபுணருக்கு அந்த ஆவணம் அனுப்பி வைக்கப்பட்டு, அந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதியினுடையதுதான் என்று தெரிய வந்தவுடன், O.S. No.80/2011 வழக்கை திரும்ப பெற்றுக் கொண்டார் என்றும், மேலும் O.S. No.80/2011 வழக்கு நிலுவையில் இருந்தபோது அதனை மறைத்து, தாவா சொத்தை பொறுத்து கூட்டு

பட்டாவில் 1ம் பிரதிவாதின் பெயரை சேர்த்துக் கொண்டார் என்றும், அது சம்பந்தமாக வாதிகள் தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில், 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டு, மீண்டும் பழைய நிலைக்கு சென்றது என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்திலேயே 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து 1/3 பாகத்தை பிரிவினையின்றி கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், ஆவணத்தில் அசல் வழக்கு எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றும், மேற்படி ஆவணம் மோசடியான ஆவணம் என்றும், மேலும் 1/3 பாகத்தை பொறுத்து கிரையம் பெற்றுள்ள 2ம் பிரதிவாதியானவர் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என வழக்கிட்டு, அதன் அடிப்படையிலேயே தாவா சொத்தில் உரிமை கூற முடியும் என்றும், அதுவரை தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் வாதிடப்பட்டது.

7.3) ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.1 ஆவணமானது பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் என்பது தெரிய வருகின்றது.வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்பது வாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

7.4) இந்த வழக்கை பொறுத்தமட்டில், தாவா சொத்தில் பிரிவினையின்றி 1/3 பாகத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதி வா.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளார் என்பது தெரியவருகிறது. ஆனால், 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் முன்னிலையாகி எதிர்வாதம் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி மட்டுமே முன்னுலையாகி எதிர்வாதம் செய்து வழக்கு நடத்தி வருகிறார்.

7.5) 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து பிரிவின்றி 1/3 பாகத்தை கிரைய ஆவணத்தின்படி கிரையம் கொடுத்துள்ளார் என்பது வாதிகள்

தரப்பில் மறுக்கப்படவில்லை. மாறாக 1ம் பிரதிவாதிக்கு சொத்தில் பாகம் உள்ளது என்பது சம்பந்தமாக O.S. No.80/2011 வழக்கு தாக்கல் செய்து, முழுமையான விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, வழக்கை திரும்ப பெற்றுக் கொண்ட நிலையில், 2ம் பிரதிவாதியை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்து, அதன் அடிப்படையிலேயே தாவா சொத்தில் அனுபவத்திற்கு வர முடியும் என்றும், வழக்கு நிலுவையில் உள்ளபோதே கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதால் அந்த கிரைய ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் வாதிடப்பட்டது.

7.6) ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்பொழுது, வா.சா.ஆ.2 ஆவணமானது 1ம் பிரதிவாதி தரப்பில் மாண்புமிகு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் O.S.No.80/2011 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை மற்றும் சம்மனின் நகல் என்பது தெரியவருகின்றது. வா.சா.ஆ.7 ஆவணமானது O.S.No.80/2011 என்ற வழக்கில் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட Not Press மனு மற்றும் அதன் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல் என்பது தெரியவருகின்றது. வா.சா.ஆ.8 ஆவணமானது O.S.No.80/2011 என்ற வழக்கில் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் என்பதும், வா.சா.ஆ.9 ஆவணமானது O.S.No.80/2011 என்ற வழக்கில் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் என்பதும் தெரியவருகின்றது.

7.7) வா.சா.ஆ.2, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியான M. ஜெகதீஸ்வரி என்பவரால் இந்த வழக்கின் வாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து 1/3 பாகம் நயமிடர் பார்த்து பிரித்து தர கேட்டு 04.07.2011ம் தேதி O.S.No.80/2011 என்ற வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு,

மேற்படி வழக்கை திருப்ப பெற கேட்டு தாக்கல் செய்யப்பட்ட I.A. No.2091/2021 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு வழக்கை திரும்ப பெற்று கொள்வதாக, இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் அடிப்படையில் ரூ.25,000/- செலவுத் தொகையுடன் (exemplary cost) தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகின்றது.

7.8) 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 30.04.2021ம் தேதி கிரையம் வாங்கியதாக தெரியவருகிறது. வா.சா.ஆ.8 OS No.80/2011 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 25.03.2022 தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதாவது, OS No.80/2011 வழக்கானது 25.03.2022ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி 2ம் பிரதிவாதி 30.04.2021ம் தேதி கிரையம் வாங்கியதாக தெரியவரும் நிலையில், OS No.80/2011 வழக்கு நிலுவையில் இருந்தசமயம், தாவா சொத்தை 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்பது தெரியவருகிறது.

7.9) 1ம் பிரதிவாதியிடம் 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய கிரைய ஆவணமான வா.சா.ஆ.5 ஆவணத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***கிரையப் பத்திரம்***

*2021-ம் வருடம் ஏப்ரல் மாதம் 30-ம் தேதி*
*தமிழ் பிலவ வருடம் சித்திரை மாதம் 17-ம் தேதி*

*மதுரை மாவட்டம்-625 020, மதுரை கிழக்கு வட்டம், ஆண்டார்கொட்டாரம், ஒத்த வீடு, கதவு எண்.5/579 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ராஜேந்திரன் அவர்கள் குமாரர் திரு. R. வருண் அவர்களுக்கு,*

*மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், ஊர்சேரி, பழைய கதவு எண்.3–195–B க்கு புதிய கதவு எண்.417 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. K. கணேசன் அவர்கள் மனைவி திருமதி. G.ஜெகதீஸ்வரி ஆகிய நான் எழுதிக் கொடுத்த நஞ்சை நிலம் சுத்தக் கிரையப் பத்திரம் என்னவென்றால், எனது தாத்தா திரு. பூங்காவனம் பிள்ளை அவர்கள் தன் பெயரில் கடந்த 21–01–1950–ம் தேதியில் மதுரை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 1 புத்தகம் 244/1950–ம் எண்ணாக கிரையப் பத்திரம் மூலம் கிரையம் பெற்ற மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், காளிகாப்பான் 2 வது பிட் கிராமம், சர்வே எண்.36/2A செண்டு 64–ம், சர்வே எண். 36/2B2 செண்டு 39–ம், ஆக மொத்தம் ஏக்கர் 1 செண்டு 03 உள்ள நஞ்சை நிலத்தை எனது தாத்தா திரு.பூங்காவனம் பிள்ளை அவர்கள் தனது கயசம்பாத்தியத் தொகையைக் கொண்டு, எல்லாவித உரிமைகளுடனும் ஆண்டனுபவித்து வந்து அப்பால் மேற்படியார் காலம் சென்ற பின்னால் வாரிசு முறைப்படி எனது தகப்பனார் திரு. பூ. முருகேசன் அவர்கள் கைவசம் கிடைக்கப் பெற்று, அது நாள் முதல் மேற்படியார் தனது கைவசம் வைத்து, எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல், மேற்படியாரின் பெயரால் தனிப்பட்டா எண்.124 என பட்டா மாற்றிக் கொண்டு, சர்க்கார் வரி வகையறாக்களை மேற்படி எனது தகப்பனார் திரு.சூ.முருகேசன் அவர்களின் பெயரால் செலுத்திக் கொண்டு, எல்லாவித உரிமைகளுடனும் ஆண்டனுபவித்து வந்திருந்தார்.*

*இந்நிலையில் கடந்த 16–05–2010–ம் தேதியில் எனது தகப்பனார் திரு.பூ.முருகேசன் அவர்கள் காலம் சென்ற பின்னால் வாரிசு முறைப்படி எனக்கும், எனது உடன்பிறந்தவர்களான திருமதி. மு. திருமணி மற்றும் மு.ஜோதிமணி ஆகிய எங்கள் மூன்று பேர்கள் கைவசம் கிடைக்கப் பெற்று ஆண்டனுபவித்து வந்த நிலையில் எனது சகோதரி மேலே சொன்ன திருமதி. மு. ஜோதிமணி அவர்கள் காலம் சென்றுவிட்டார்.*

*இந்நிலையில் எனது குடும்ப உபயோகரமாக மற்றும் குடும்ப அபிவிருத்தி செலவினங்களுக்காக சர்வ சுதந்திரப் பாத்தியப்பட்ட மேலே சொன்ன ஏக்கர் 1 செண்டு 03–ல் பிரிவினையில்லாத மூன்றில் இரண்டு பங்கு நீங்கலாக மீதமுள்ள எனது ஒரு பங்கான செண்டு 34.33 உள்ள நஞ்சை நிலத்தைப் பொறுத்து நான் இன்றைய தேதியில் தங்களுக்கு ரூ.38,17,143/–க்கு கிரையம் பேசி அதன் பிராகரம் மேற்படி கிரையத் தொகை முழுவதையும் நான் தங்களிடமிருந்து கீழ்கண்ட பணப்பற்று விபரப் பிரகாரம் பெற்றுக் கொண்டு, எனது பற்றாகி விட்ட படியால் மேற்படி கிரையத் தொகைக்கு அறுதியாக அடியில் கண்ட சொத்து விவரத்தில் கண்ட நஞ்சை நிலம் மற்றும் அதன் அனுபவ பாத்தியம் உட்பட அதில் எனக்குள்ள சகல*

யாவற்று பாத்தியங்களையும் சேர்த்து நான் நாளது தேதியில் இந்த கிரையப் பத்திரம் மூலம் எழுதி பதிவு செய்து கொடுத்து சொத்து சகிதம் உள்பட நான் தங்களது சுவாதீனத்தில் ஒப்படைத்து விட்டேன்.

பணப்பற்று விபரம்

| வ.எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | மதுரை மாவட்டம், கோமதிபுரம் கிளை, கனரா வங்கி, காசோலை எண்.473994–ன் பிரகாரம் எனக்கு வரவான தொகை | ரூ.38,17,143/– |
| | ஆக மொத்தம் | ரூ.38,17,143/– |

ஆக மேலே சொன்ன பணப்பற்று விபரத்தில் கண்ட கிரையத் தொகை முழுவதும் மேற்படி விபரப்படி பற்றானது சரி.

இதில் கண்ட நஞ்சை நிலத்தின் சுவாதீனத்தை தாங்களும் அடைந்து கொண்ட பிரகாரம் நாளது தேதி முதல் என்றென்றைக்கும் தங்கள் புத்திர பௌத்திர சந்ததி பரம்பரையாய் தானாதி விநியோக விற்கிரையங்களுக்கு யோக்கியமாய் பட்டா உள்பட தங்கள் பெயருக்கு மாற்றிக் கொண்டு ஆண்டு அனுபவித்து சுகத்தில் இருப்பீர்களாகவும்.

இதில் கண்ட நஞ்சை நிலத்தைப் பொறுத்து இனிமேல் எனக்கோ, எனது வாரிசுகளுக்கோ எவ்வித பாத்தியமும், பின் தொடர்ச்சியும் கிடையாது என உறுதி கூறுகிறேன்.

இதில் கண்ட நஞ்சை நிலத்தைப் பொறுத்து நான் எவ்வித அபிமானத்திற்கோ, விவசாய கூட்டுறவு வங்கி அல்லது மற்ற வங்கிகளிலோ கொல்லேட்டிரல் செக்யூரிட்டியாகவோ கொடுக்கவில்லை என்று உறுதியாய் கூறுகிறேன்.

இதில் கண்ட நஞ்சை நிலத்தைப் பொறுத்து நான் தங்களுக்கு கிரையம் செய்து கொடுத்ததை தவிர வேறு யாருக்கும் எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தவில்லை எனவும், என்னைத் தவிர வேறு யாருக்கும் சொத்தில் உரிமையில்லை எனவும், எவ்வித வழக்குகளும் நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லை எனவும், அப்படி ஏதேனும் பின் வில்லங்க, விவகாரம் ஏற்பட நேரிட்டால் அதை நானே முன்னின்று எனது சொந்தச் செலவிலும், பொறுப்பிலும், எனக்கு பாத்தியப்பட்ட இதர ஸ்தாவா, ஜங்கம சொத்துக்களிலிருந்தும் தங்களுக்கு தீர்த்துக் கொடுப்பேன் என

*உறுதி கூறுகிறேன்.*

*இக்கிரையப் பத்திரத்தினை உறுதி செய்வதற்காகவும், பிழைத்திருத்தம் ஏற்பட்டால் அதற்கும் இன்னும் பிற நியாயமான காரணங்களுக்காகவும் பின்னிட்டு எனது கையொப்பம் தேவைப்பட்டால் எவ்வித பிரதி பலனையும், எதிர்ப்பார்க்காமல் சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து தானே கையொப்பமிட்டு தருவதாக இதன் மூலம் தங்களுக்கு உறுதியாய் கூறுகிறேன்.*

*இதில் கண்ட நஞ்சை நிலத்தின் பட்டாவை தங்கள் பெயருக்கு மாற்ற இத்துடன் பட்டா மாறுதல் மனுவும் கொடுத்துள்ளேன்.*

*இதற்கு ஆதரவாக–*

*1. மதுரை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 1 புத்தகம் 244/1950–ம் எண்ணாக பதிவான கிரையப் பத்திரம் காணாமல் போய் விட்ட படியால் மேற்படி அலுவலகத்தில் எடுக்கப்பட்ட அலுவலக நகல் காப்பி,*

*2. மேற்படி கிரையப் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள மூலாதரவு தஸ்தாவேசுகளின் ஜெராக்ஸ் காப்பி,*

*3. மேற்படி பத்திரம் காணாமல் போனது சம்மந்தமாக கடந்த 23–04–2021–ம் தேதியில் மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் (அலங்காநல்லூர் காவல் நிலைய எல்கைக்குட்பட்டது) கொடுக்கப்பட்ட CSR NO.CAJ21057171–ம் நம்பர் புகார் மனு.*

*4. மேற்படி பத்திரம் காணாமல் போனது சம்மந்தமாக கடந்த 22–04–2024–ம் தேதியில் மக்கள் குரல் நாளிதழ் விளம்பரம்,*

*5. கொரனா பரவல் காரணத்தினால் காணாமல் போன மேலே சொன்ன 244/1950–ம் பத்திரத்திற்குரிய (UNTRACABLE CERTIFICATE)–ஐ சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் பெற இயலவில்லை, அதற்கு பதிலாக மேற்படி காவல் நிலையத்தினால் வழங்கப்பட்ட CSR NO.CAJ21057171–ஐ கொடுத்துள்ளேன்.*

*6. மதுரை கிழக்கு வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட கணிணி சிட்டாவின் ஜெராக்ஸ் காப்பி,*

*ஆகியவற்றை நான் தங்கள் கைவசம் கொடுத்துள்ளேன்.*

<u>*சொத்து விபரம்*</u>

*மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், தெப்பக்குளம் சப்டி, மதுரை வடக்கு வட்டமாக இருந்து தற்போது மதுரை கிழக்கு வட்டம், காளிகாப்பான் 2 வது பிட் கிராமத்தில் அயன் நஞ்சை பழைய பட்டா எண்.1209–க்கு தற்போதைய சப்டிவிசன்படி தனிப்பட்டா எண்.124–ல் கண்ட*

*ரீசர்வே மற்றும் UDR சர்வே எண்.36/2A ஏர்ஸ் 0.26.0—க்கு செண்டு 64—ம், ரீசர்வே மற்றும் UDR சர்வே எண்.36/2B2 ஏர்ஸ் 0.16.0—க்கு செண்டு 39—ம், ஆக மொத்தம் ஏக்கர் 1 செண்டு 03 உள்ள நஞ்சை நிலத்திற்கு நான்குமால் விபரம்.*

| | |
|---|---|
| *வடக்கே* | *விக்னேஷ் அவென்யூ பிளாட்டுகள்* |
| *கிழக்கே* | *கிட்னி செண்டர் குடியிருப்பு வீடுகள்* |
| *தெற்கே* | *பொன்னி நகர் பிளாட்டுகள்* |
| *மேற்கே* | *வாய்க்கால்* |

*இதற்குள்பட்டது நஞ்சை ஏக்கர் 1 செண்டு 03—ல் பிரிவினையில்லாத மூன்றில் எனது ஒரு பங்கான செண்டு 34.33 உள்ள நஞ்சை நிலம் முழுவதும் தங்களுக்கு சுத்தக் கிரையம்.*

*மேற்படி சொத்து மதுரை கிழக்கு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கருப்பாயூரணி கிராம பஞ்சாயத்துக்குள்பட்டது.*

*மேற்படி சொத்தின் தற்கால மார்க்கெட் மதிப்பு ரூ.38,17,143/—.*

அதாவது, வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்திலிருந்து தாவா சொத்தானது 1ம் பிரதிவாதி, திருமணி, ஜோதிமணி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி சொத்தில் 1ம் பிரதிவாதிக்குரிய பிரிவின்றி 1/3 பாக சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் கிரையம் கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. மேலும், மேற்படி ஆவணத்தில் எவ்வித வழக்குகளும் நீதிமன்றத்தில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வா.சா.ஆ5 கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்த சமயத்தில், அதை எழுதிக் கொடுத்த 1ம் பிரதிவாதி மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த O.S. No.80/2011 வழக்கானது நிலுவையில் இருந்து வந்தது என்பது வா.சா.ஆ.8 ஆவணம் மூலம் தெரியவருகிறது.

7.10) வா.சா.ஆ.3 ஆவணமானது மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.7349/2014/என் என்பது தெரியவருகின்றது. மேற்படி வா.சா.ஆ.3 உத்தரவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"தாவா சொத்தின் உரிமை தொடர்பாக மதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.எண். 80/2011–ன்படி எதிர்மனுதாரரால் சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், எதிர்மனுதாரர் மேற்படி வழக்கினை மறைத்து வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா மாறுதல் விண்ணப்பம் அளித்து சர்வே எண்.36/2ஏ 36/2பி2–க்கு மட்டும் 25.06,2013–ம் தேதி கூட்டுப்பட்டா பெற்றுள்ளார். (பட்டா எண்.1209) மேற்படி கூட்டுப்பட்டாவில் காலமாகிவிட்ட அவரது தந்தை முருகேசன் மற்றும் தயாயார் ராஜாத்தி ஆகியோர் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி தாவா சொத்தின் உரிமை தொடர்பாக எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் இருக்கும்போதே எதிர்மனுதாரர் ஆவணஎண்.3074/2014–ன்படி திரு. எம். கருணாமூர்த்தி என்பவருக்கு கிரைய ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளது வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளார் என்பது ஊர்ஜிதமாகிறது.*

*தாவா சொத்தின் உரிமை தொடர்பாக மதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.எண். 80/2011–ன்படி சிவில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பட்டா மாறுதல் செய்யப்பட்டது தவறாகும். வாரிசுதாரர்கள் அனைவருக்கும் நோட்டீஸ் அனுப்பி விசாரணை செய்த பின்பே பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும். இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. எனவே, மேற்படி பட்டா மாறுதல் செய்யப்பட்ட ஆர்.டி.ஆர்.எண்.6155/13 நாள்: 24.06.2013–ன் உத்தரவு இதன் மூலம் ரத்து செய்யப்பட்டு, பட்டா மாறுதலுக்கு முந்தைய நிலைக்கு கொண்டு செல்ல மதுரை கிழக்கு வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது."*

அதாவது வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, 1ம் பிரதிவாதி O.S. No.80/2011 வழக்கு நிலுவையில் இருந்த போது, வருவாய் துறையில் 1ம் பிரதிவாதி பெயருக்கு கூட்டு பட்டா பெற்றுள்ளார் என்பதும், அதன் அடிப்படையில் வாதி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, அதற்கு முந்தைய நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகின்றது. மேலும், மேற்படி உத்தரவில் மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட O.S.No.80/2011 வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில், தாவா சொத்து உரிமையினை முடிவு செய்யலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.11) 2ம் பிரதிவாதி தரப்பிலேயே தாவா சொத்தில் பிரிவின்றி 1/3 பாகத்தை கிரையம் பெற்றதாகவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே 2ம் பிரதிவாதிக்கு மொத்த சொத்தில் எந்த பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து எந்த ஒரு விபரமும் காணப்படவில்லை. தாவா சொத்தை பொறுத்து ஒரே குடும்பத்தை சேர்ந்த நபர் இல்லாமல் வெளியிலுள்ள நபர் கிரையம் வாங்கி உள்ளார். அதாவது, 2ம் பிரதிவாதி கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவரிடம் இருந்து கிரையத்தை பெற்ற நபர் ஆவார். கூட்டு குடும்ப உறுப்பினரிடமிருந்து கிரையத்தை பெற்ற நபர் என்ற முறையில் தாவா சொத்தின் அனுபவத்தில் 2ம் பிரதிவாதி இருந்து வந்தார் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளதா என்பது சம்மந்தமாக 2ம் பிரதிவாதி பாகப் பிரிவினை வழக்கு தாக்கல் செய்து, அதன் அடிப்படையிலேயே தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி உரிமை கோர முடியும் என்றும் வாதிகள் தரப்பில் வாதிடப்படுகின்றது.

7.12) வழக்குரையின் அடிப்படையில் பார்க்கும்போது, வாதிகள் தரப்பில் வழக்கிடைச் சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பாத்திய உரிமை உள்ளது என 2ம்

பிரதிவாதி தனியாக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெறும் வரை வழக்கிடைச் சொத்தின் வாதிகளின் அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, அவரது முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. ஆனால், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளநிலையில், மேற்படி ஆவணம் சம்மந்தமாக எந்தவொரு பரிகாரமும் வாதிகள் தரப்பில் கோரப்படவில்லை. ஆனால், வா.சா.ஆ.15 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.5 மற்றும் பி.வாசா.ஆ.6 ஆவணங்களை ரத்து செய்ய கேட்டு 1ம் வாதி தரப்பில் மதுரை வடக்கு மாவட்ட பதிவாளர் அவர்களிடம் மனு எண். 5110/அ3/2021 என்ற எண்ணில் கொடுக்கப்பட்ட மனுவானது 20.06.2022ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மேற்படி ஆவணங்களை பொறுத்து செல்லா நிலையது என விளம்புகை கேட்டு உரிய நீதிமன்றம் வழியாக முடிவு தேடிக் கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை எதிர்த்து துணை பதிவு துறை தலைவர் அவர்கள் முன்பாக மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ.16 ஆவணம் மூலம் தெரியவருகின்றது. வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆவணங்கள் சம்மந்தமாக இந்த நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் எந்தவொரு பரிகாரமும் கோரப்படவில்லை. மேலும், வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத பாக பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில், தாவா சொத்துக்கள் முழுவதுமாக வாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று எந்தவொரு பரிகாரமும் வாதிகள் தரப்பில் கோரப்படவில்லை.

7.13) இந்த வழக்கை பொருத்தமட்டில் தற்பொழுது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், வாதி தரப்பில் வாதிடும் வாதமான தாவா சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என பாகப்பிரிவினை

வழக்கு தாக்கல் செய்து, அதன் அடிப்படையில் தான் உரிமை கொண்டாட முடியும் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதா? அல்லது கிரையம் பெற்றது முதல் தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதா? என்பதே ஆகும்.

7.14) வா.சா.ஆ.5 ஆவணமான 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின்படியே தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் வாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதும், தாவா சொத்தில் பிரிவின்றி 1/3 பாகத்தை மட்டுமே 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்குக் கிரையம் கொடுத்துள்ளார் என்பதும் தெரியவருகின்றது.

7.15) சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 44ஆனது கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.

> ***"(s 44) Transfer by one co-owner. -*** *Where one of two or more co-owners of immovable property legally competent in that behalf transfers his share of such property or any interest therein, the transferee acquires as to such share or interest and so far as is necessary to give, effect to the tranfer, the transferor's right to joint possession or other common or part enjoyment of the property, and to enforce a partition of the same, but subject to the conditions and liabilities affecting at the date of transfer, the share or interest so transferred.*
>
> *Where the transferee of a share of a dwelling-house belonging to an undivided family is not a member of the family, nothing in this section shall be deemed to entitle him to joint possession or other common or part enjoyment of the house."*

7.16) 2ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 44ன் அடிப்படையில் பிரிவின்றி 1/3 பாகத்தை கிரையம் பெற்றுள்ள 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் வந்துவிடுவார் என்றும், எனவே கூட்டுரிமையாளருக்கு எதிராக வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக் கட்டளை

பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.

7.17) மாறாக, வாதிகள் தரப்பில் பாக பிரிவினை கோரி 1ம் பிரதிவாதி மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் OS No.80/2011 என்ற வழக்கு நிலுவையில் இருந்தபோது, 2ம் பிரதிவாதி பிரிவின்றி 1/3 பாகத்தை கிரையம் பெற்ற நிலையில், மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எந்தவொரு தீர்ப்புரையும் பிறப்பிக்கப்படாத நிலையில், 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கை திரும்ப பெற்றுவிட்டார் என்றும், அதன் அடிப்படையில் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே 1ம் பிரதிவாதியிடமிருந்து பிரிவின்றி 1/3 பாகத்தை கிரையம் வாங்கிய 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் உள்ளது என பாகப் பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்து, அதன் அடிப்படையிலேயே உரிமை கோர முடியும் என்றும், அதுவரை தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

7.18) வா.சா.ஆ.5 ஆவணமான 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணத்திலேயே தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி மற்றும் வாதிகள் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை பொறுத்து மேற்கொண்டு நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.

7.19) வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி பிரிவின்றி 1/3 பாகத்தை கிரையம் பெற்றதாலேயே 2ம் பிரதிவாதி கூட்டு அனுபவத்தில் உள்ளார் என்றும், எனவே கூட்டு உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும், 2ம் பிரதிவாதி தரப்பில் வாதிடும் வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பது பரிசீலனை செய்யப்பட வேண்டியுள்ளது.

7.20) இதுசம்மந்தமாக மாண்புமிகு உச்ச நீதிமன்றமானது *29.05.2009ல் Ramdas vs SItabai & Ors (Civil Appeal No.6508/2005)* என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*15. Without there being any physical formal partition of an undivided landed property, a co-sharer cannot put a vendee in possession although such a co-sharer may have a right to transfer his undivided share. Reliance in this regard may be placed to a decision of this Court in M.V.S. Manikayala Rao Vs. M. Narasimhaswami & Ors. (AIR 1966 SC 470), wherein this Court stated as follows:*

> *"Now, it is well settled that the purchaser of a co-parcener's undivided interest in the joint family property is not entitled to possession of what he had purchased. His only right is to sue for partition of the property and ask for allotment to him of that which, on partition, might be found to fall to the share of the co-parcener whose share he had purchased."*

*16. It may be mentioned herein that the aforesaid findings and the conclusions were recorded by the Supreme Court by placing reliance upon an earlier judgment of this Court in Sidheshwar Mukherjee Vs. Bhubneshwar Prasa Narain Singh & Ors. (AIR 1953 SC 487), wherein this Court held as under:-*

> *"All that (vendee) purchase at the execution sale, was the individual interest of co-parcener in the joint property. He did not acquire to any defined share in the property and was not entitle to joint possession from the date of his purchase. He could work-out his rights only by a suit for partition and his right to possession would date from the period when specific allotment was made in his favour (Emphasis added)*

*17. In view of the aforesaid position there could be no dispute wiht regard to the fact that an undivided share of co-sharer may be subject matter of sale, but possession cannot be handed over to the vendee unless the property is partitioned by metes and*

*bounds amicably and through mutual settlement or by a decree of the Court.*

மேலே கண்ட முன்தீர்ப்புரையின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கூட்டு உரிமையாளர்கள் பிரிக்கப்படாத சொத்தை கிரையம் வாங்கும் நபருக்கு பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதற்கான உரிமை மட்டுமே கிடைக்கப் பெறும் என்றும், பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அதன் அடிப்படையிலேயே சொத்தில் உடைமை கோர முடியும் என்றும் தெரிவித்துள்ளது. இந்த வழக்கை பொறுத்து, 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் பிரிவின்றி 1/3 பாகத்தை வா.சா.ஆ.5ன்படி கிரையம் பெற்றுள்ளார். எனவே, 1ம் பிரதிவாதிக்குரிய பாகத்தை கிரையம் பெற்றுள்ள 2ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து, 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிரிவின்றி 1/3 பாகத்தை பொறுத்து, பாக பிரிவினை வழக்கை தாக்கல் செய்து, அதன் அடிப்படையிலேயே 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகத்தை பொறுத்து முடிவு செய்ய முடியும் என்பது தெரியவருகிறது. மேலும் வா.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதிகளும், 1ம் பிரதிவாதியும் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், 2ம் பிரதிவாதி வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தின்படி கிரையம் பெற்ற 1/3 பாகத்தை பொறுத்து, பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்து, 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என உறுதி செய்யப்படும் வரை தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்தில் இடையூறு செய்யக்கூடாது என்ற வாதிகளின் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7.21) மேலே கண்டவற்றின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று மாற்றியமைக்கப்பட்ட எழுவினா 1ஐ பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது. 2ம் பிரதிவாதி

வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தின்படி கிரையம் பெற்ற 1/3 பாகத்தை பொறுத்து, பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்து, 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என உறுதி செய்யப்படும் வரை தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்தில் இடையூறு செய்யக்கூடாது என மாற்றியமைக்கப்பட்ட எழுவினா 2ஐ பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

08. மாற்றியமைக்கப்பட்ட எழுவினா 3ற்கான தீர்வு :

3) To what other reliefs?

மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்கள் 1 மற்றும் 2 ஆகியவற்றைப் பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளபடியால் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று மாற்றியமைக்கப்பட்ட எழுவினா 3–யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வழக்கிடைச் சொத்தில் 2ம் பிரதிவாதி வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தின்படி கிரையம் பெற்ற 1/3 பாகத்தை பொறுத்து, பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்து, 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என உறுதி செய்யப்படும் வரை தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM
Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.08.10 18:34:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

வாதிகள் தரப்பு சாட்சி :

1.வா.சா.1 – திரு. திருமணி

TNMD150003332022

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| வாதிகள் தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.03.1995 | பாகப் பிரிவினை பத்திரம். | அசல். |
| வா.சா.ஆ.2 | --- | அசல் வழக்கு எண்.80/2011ல் உள்ள பிராது. | சார்வு நகல். |
| வா.சா.ஆ.3 | --- | மதுரை வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்துள்ள உத்தரவு. | சார்வு நகல். |
| வா.சா.ஆ.4 | 25.02.2021 | கையெழுத்து நிபுணரின் அறிக்கை. | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.5 | 30.04.2021 | கிரைய ஆவணம். | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.6 | 15.06.2021 | சீர்த்திருத்தப் பத்திரம். | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.7 | --- | அசல் வழக்கு எண்.80/2011 ல் வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள Not press memo | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.8 | 25.03.2022 | அசல் வழக்கு எண்.80/2011 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு . | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.9 | 25.03.2022 | அசல் வழக்கு எண்.80/2011ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை . | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.10 | 08.11.2014 | கருணாமூர்த்தி, 1ம் வாதிக்கு காவல்துறை விசாரணையின்போது எழுதிக்கொடுத்த வாக்குமூலம். | நகல். |
| வா.சா.ஆ.11 | 19.08.2021 | மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு. | கையிருப்பு நகல். |
| வா.சா.ஆ.12 | 21.12.2021 | தபால் மூலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீது . | கையிருப்பு நகல் மற்றும் அசல். |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.13 | ---------- | தபாலை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை. | அசல். |
| வா.சா.ஆ.14 | 07.01.2022 | மதுரை மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து அளிக்கப்பட்ட காவல் அழைப்பாணை . | அசல். |
| வா.சா.ஆ.15 | 20.06.2022 | மாவட்ட பதிவாளர் அவர்கள் பிறப்பித்த உத்தரவு. | நகல் . |
| வா.சா.ஆ.16 | ---------- | துணை பதிவுத் தலைவர் அவர்களிடம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு. | கையிருப்பு நகல். |
| வா.சா.ஆ.17 | ---------- | 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட கேவியட் மனு. | சார்வு நகல். |
| வா.சா.ஆ.18 | ---------- | 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.81/2011 பிராதுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்ட A ரிஜிஸ்டர் | சான்றிட்ட நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :</u>

1.பி.வா.சா.1 – திரு. வருண்

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| <u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம்</u> | <u>தேதி</u> | <u>ஆவண விபரம்</u> | <u>குறிப்பு</u> |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 09.07.2021 | தான செட்டில் மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.2 | 02.12.2002 | பவர் பத்திரம் | சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.3 | 28.11.1980 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.4 | 18.11.1993 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல். |

TNMD150003332022

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.5 | 30.04.2021 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.6 | 15.06.2021 | சீர்திருத்த பத்திரம் | சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.7 | 24.02.2023 | சீர்திருத்த பத்திரம் | சான்றிட்ட நகல் |

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.08.10 18:35:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.